University of Jaffna Sri Lanka
RECEIVED
1989-10-19
Periodicals Division
Library

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

உண்மை
UNMAI

இதழ் 6 மாதம் இருமுறை விலை ரூபா 4.00

உள்ளே----

- 300 யார் வயரின் பெறுமதி 12 தமிழர்களின உயிர்
- உண்மை ஆசிரியர் பேசுகிறார்
- ஏஜனசி விதாஜனகள்
- திபங்களே திபந்தமாக்காதீர்
- சாத்தான் வேதம் ஒதுகிறது
- விடுதலைப்புலிகளின் அறிக்கைகள்
- யார் இவர்? கண்டுபிடியுங்கள்
- கேள்வி-பதில்

2வது ஆண்டு நினைவாஞ்சலி

'நான் பேச நினைக்கிறேன் ஆனால் என்னால் பேசமுடியவில்லை'

(நியாக நிபம் திலீபன்)

உண்மைதான் திலிபா நீ வாயுள்ள ஊமையானாய், கண் இருந்தும் குருடானாய் காதுள்ள செவிடானாய்உன்உள்ளக்கருத்தை கூற முடியாத உயிருள்ள பிணமானாய் ஆனால் உன் எண்ணம் உணர்த்தப்பட்டு விட்டது. அந்நியன் எம் மண்ணை ஆக்கிர மிக்க போகின்றான். நம் மக்கள் ஆறுத் துயரில் மூழ்கப் போகின்றனர் என்பதை முன்னரே உணர்ந்த உன் தீர்க்கதரிசனம் உணர்த்தப்பட்டுவிட்டது. இக் கொடூரங் களை உன் கண்ணால் காண சகியாது சொந்த மண்ணை மீட்கவும் தமிழினத்தின் தன் மானம் காத்திடவும் உன் இன் உயிர் நீத்த நியாக திபமே, செந்தமிழ் செல்வமே! தன் மான தமிழ் சிங்கமே ''திலீபா'' நீர் மறைந்து இரண்டாண்டுகள் முடிவுறும் இவ்வேளையில் உம்மை நினைவு கூர்ந்து 'உண்மை' தனது கண்ணீர் அஞ்சலியை உமது பொற்பாதங்களில் சமர்ப்பித்துஉமது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறது.

கரந்தடிப்படையின் அதிரடித் தாக்குதல்

ஆயுதம் பறிமுதல்!

அண்மையில் யாழ்ப்பாணத்தில் புலி வேட்டைக்கு மினி பஸ் ஒன்றில் சென்ற மாகாணசபை ஆளுங்கட்சி கூட்டத்தினர் நீர்வேலி சந்தியில் வைத்து விடுதலை புலி கரந்தடி படையினரின் அதிரடி தாக்குதலுக்கு இலக்காகியதில் மினி பஸ்வில் சென்ற பதினைந்து பெயரில் பன்னிருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றைய மூவரும் விடுதலை புலிகளால் காயம் எதுவு மின்றி கைது செய்யப்பட்டனராம். இவர்களது 15 துப்பாக்கிகளையும் ரவைப் குண்டுகளையும் விடுதலை புலிகள் கைப்பற்றினர்.

இச்சம்பவத்தை அடுத்து மறுநாள் விடுதலைப்புலிகளை கண்டோடு அழித்து அவர் களால் கைது செய்யப்பட்ட தமது சகாக்கள் மூவரை யும் மீட்டெடுப்பதற்கென பதிதுக்கும் மேற்பட்ட மினி பஸ்வில் சென்ற மாகாண சபை ஆளுங்கட்சி கூட்டம் முதல்நாள் சம்பவம் நடந்த இடத்துக்கு சற்று தொலை வில் மீண்டும் விடுதலை புலி களால் சுற்றி வளைக்கப் பட்டு கடுமையான தாக்கு தலுக்கு உள்ளாகியதில் பல அந்நிய அடிவருடிகள் உயிரி முத்தது தப்பினோம் பிழைத்தோம் என ஓட்டம் பிடித்தராம். இத்தாக்கு தலில் மரணமடைத்தவர் கள் ஒன்பது பேரின் சடலங் கள் ஸ்தலத்திலேயே தீக்கி

(4ம் பக்கம் பார்க்க)

காமுகனின் காடைத்தனம்!

டெலோ இயக்கத்தைச் சேர்ந்த இருட்டு என அழைக்கப்படும் ஜயா என்பவர் கோட்டைக்கல் லாறு என்னும் கிராமத்தைச் சேர்ந்த மத்திய கிழ க்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்று சென்றுள்ள வர்களின் தனிமையாக வாழுகின்ற மனைவியரிடமும் இளம் விதவைப் பெண்களிடமும் இரவில் புலிகளி டம் இருந்து தப்பிக்கொள்ள புகலிடம் என்ற போர்வையில் இரவில் தங்குவதற்கு இடம் கேட்டி ருராம்; இவர் ஏந்தியிருக்கும் கொடிய ஆயுதத்

(7ம் பக்கம் பார்க்கவும்)

பெண் புலிகளுக்கு ஈடுகொடுக்க முடியாத அன்னியபடை திரும்பி ஓட்டம்!

கடந்த 20ம் திகதிமுதல் பிரகடனப்படுத்தப் பட்ட காலவரையற்றதும் நிபந்த னையற்றதுமான யுத்த நிறுத்தத்துக்கு பல தினங் களுக்குமுன்னர் திருகோண மலை பகுதியைச் சார்ந்த கும்புறுபிட்டி என்னும் கிராமத்தை அண்டிய கொக்குளாய் எனப்படும் பெரும் காட்டுப்பகுதியில் உள்ள புலிகளின் மறைவிங் களை தகர்த்து புலிகளை வேட்டையாட சென்ற அன் னிய படையும் அவர்களின் அடிவருடி இயக்கங்களு மான மாகாணசபை ஆளுங் கட்சியும் அவர்களின் அணி

(7ம் பக்கம் பார்க்க)

எச்சரிக்கை!

மாகாண சபை ஆளும் கட்சியின் பிரதான உறுப்பினரை நாடி சிவ கன்னிப் பெண்க ளின் பெற்றோர் வேலைவாய்ப்புக் கோரிச்சென் றனராம். இவர்கள் வந்த விஷயத்தைக் கேட்டு அறிந்து கொண்ட அந்த உறுப்பினர் பிள்ளைகளைப் பார்த்துத்தான் வேலை தர முடி யும் என கூறினராம். என்னத்தைப் பார்க் கப் போகிறீரோ எதை எதிர்பாக்கிறீரோ? எல் லாம் வல்ல இறைவனுக்குத்தான் வெளிச்சம்

உறுதியாகட்டும் தமிழர் பாதுகாப்பு!
ஓங்கட்டும் தமிழர் கலாச்சாரம்!!
வளரட்டும் தமிழர் மண்பாடு!!!

முற்போக்கு அரசியல் நடுநிலை செய்தி பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை
UNMAI

1 ஒக்டோம்பர் 1989 ஞாயிற்றுகிழமை

ஜனசவிய பயிற்சி ஆசிரியர் நியமனமும் தொண்டர் ஆசிரியர் நிலைப்பாடும்

அண்மையில் ஜனசவிய திட்டத்தின் கீழான பயிற்சி ஆசிரியர் தெரிவின் தேர்முக பரிட்சை வட-கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சியினரால் குழப்பியடிக்கப்பட்டது சம்மந்தமான உண்மையின் கருத்து. கடந்த சில வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக பல் படித்த இளைஞர்களும் யுவதிகளும் ஊதிய மிற்றி பணியாற்றி வருகிறுல்கள். இவ்விதமாக பணியாற்றி வருபவர்கள் தமக்கு நிரந்தர ஆசிரிய நியமனத்தில் முன்னுரிமை கிடைக்கும் என எதிர்பார்த்தும் இருந்தார்கள் இவர்களின் எதிர்பார்ப்பு முற்றிலும் நியாயமானது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள், மறுக்கவும் முடியாது.

இவ்விதமாக இவர்கள் பணியாற்றியதன் பலனாக பல கிராமப்புற பாடசாலைகளின் காலம் வீணடிக்கப் படாது பயனுள்ளதாக அமைய ஏற்புடையதாகவும் இருந்தது.

அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
இன்னை யாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்னும் பாரதியார் பாடலுக்கமைய இவ்விதமாக பணிபுரிந்த தொண்டர் ஆசிரியர்கள் தியாக செம்மல்களே.

இவர்களின் இவ் மாபெரும் பணியை அரசு சரியாக புரிந்துகொள்ள தவறிவிட்டது எனக்கூறின் அது மிகையாகாது. அதே வேளை இவர்களும் தம்மை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் சில காரியங்களை செய்யத்தவறி விட்டார்கள். கல்வித் திணைக்களமும் இவர்களை பலவீனப் படுத்தக்கூடிய காரியங்களையே, நன்றிகெட்டத்தனமாக செய்து கொண்டது. இதை சரியாகக் கூறுவதானால் தொண்டர் ஆசிரியர்களை சந்தர்ப்பத்துக்கு பயன்படுத்திக் கொண்டார்கள் என்றே கூறவேண்டும்.

தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்ற முன்வந்தவர்களால் சில வருடங்களாக கிராமப்புற பாடசாலைகளின் ஆகிரிய பற்றாக்குறை செலவின்றி சமாளிக்கப் பட்டதை அரசு மறந்துவிட முடியாது. இவர்களின் இப்பாரிய பணி சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு மட்டுமன்றி நாட்டின் கல்வி செலவீனத்தில் ஒரு பகுதியை மீதப்படுத்திய தொண்டர் ஆசிரியர்களை ஆரம்ப ஆசிரியர் நியமனத்திலேயே நிரந்தரமாக்கியிருக்க வேண்டியது அரசின் தலையாய கடமை.

மாணவர்களின் கல்வி சம்பந்தப்பட்ட இவ்விடயத்தில் அரசு கூறுகின்ற காரணத்தை ஒதுக்கியும்விட முடியாது. நாட்டின் எதிர்கால சந்ததியை உருவாக்குகிறவர்கள் அதற்குரிய தகுதிகாண் பரீட்சைகளில் சித்திபடைய வேண்டியது அவசியம். இவ்வகையில் தேர்க்கும் போது இதுவரை காலமும் தகுதியற்றவர்களால் தான் மாணவர்களுக்கு கல்வி புகட்டப்பட்டதா? என்ற நியாயமான கேள்வியும் எழுப்பப்படலாம்.

தொண்டர் ஆசிரியர்களாக நியமிக்கும் போதே அவர்களை ஓர் தேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தி நியமனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்த பிழையை செய்தவர்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவும், அதிகாரிகளும், பாடசாலை அதிபர்களுமே. அதே வேளை தொண்டர் ஆசிரியர்களாக பணி புரிந்தவர்களுக்கு கல்வி அலுவலகத்தால் வழங்கப்பட்ட அனுமதிபத்திரத்தில் இவர்கள் இத்தொழிலை தமக்கு நிரந்தரமாக கோரமாட்டோம் என்ற உறுதி மொழியையும் பெற்றிருக்கிறார்கள். இவ்வாறான ஓர் நிபந்தனையை சட்ட ரீதியாக ஏற்றுக் கொண்டவர்கள் தமக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றோ அல்லது நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்றோ வாதிடும் உரிமையை இழந்து விட்டார்கள். அதுமட்டுமல்ல இவர்கள் இவ்விதமாக பணிபுரிய முன் வந்திராவிடின் அரசுக்கு ஆசிரிய பற்றாக்குறையை தீர்த்து வைக்க வேண்டிய அவசியமும் உருவாகியிருக்கும். அதனையும் இவர்கள் தடைசெய்துவிட்டனர்.

எது எவ்வாறுயினும் ஓர் நெருக்கடியை கல்வி அமைச்சும், கல்விச் சேவை ஆணைக்குழுவும், அதன் உயர் அதிகாரிகளும் ஏற்படுத்திவிட்டனர் என்றே கூற வேண்டும்.

மறுபக்கம் பார்த்தால் சிக்கலான இந்த பிரச்சினையை வட-கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சி மிக புத்திசாதுர்யமாக மத்திய அரசை அணுகி நல்லதொரு தீர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டியவர்கள் தமது தெளிவற்ற அரசியல் நிலைப்பாட்டால் பிழையான அணுகுமுறையை கையாண்டு குட்டையை நன்றாகவே குழப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள்.

இவ்வாறான நிலையற்ற தவறான கொள்கையால் ஆயிரக்கணக்கான வட-கிழக்கு தமிழ் இளைஞர் யுவதிகளின் தொழில்வாய்ப்பு தடை செய்யப்பட்டதுடன் வட-கிழக்கு மாகாணங்களின் கிராமப்புற பாடசாலைகளின் ஆகிரிய பற்றாக்குறையும் தீர்க்கப்பட முடியாத துர்திஷ்டமான நிலை ஏற்பட்டுவிட்டது. தகுதியற்றவர்கள் கையில் தமது பிரதிநிதித்துவத்தை ஒப்படைத்த வட-கிழக்கு வாழ் மக்களே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் என்பது ஜீரணிக்க முடியாத உண்மை.

எட்டப்பர் கும்பலுக்குள் இழுபறி

அண்மையில் களுவாஞ்சிக்குடி கிராமத்தில் உள்ள டெலோ முகாம் பொறுப்பாளரும் டெலோ பா. உ. ஒருவரின் தம்பியுமான மாமா என அழைக்கப்படுபவர் மாகாணசபை ஆளும் கட்சி ஈ பி ஆர் எல் எப் உறுப்பினர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டாராம். அன்னிய படையின் அடிவருடிகளான இவ்விரு குழுக்களும் இவ்விதமாக தமக்குள் மோதிக்கொண்டமை இவர்களுடைய உறவுக்குள் விரிசலை ஏற்படுத்தியுள்ளதாகக்கூறப்படுகிறது.

வெகு விரைவில் இவ்விரு குழுக்களும் மோதிக்கொள்ளும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாக அப்பகுதி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இம்மோதலின் பின்னணி அந்நியனுக்கு நெருங்கிய வைப்பாடிச்சியாக இருப்பதில் ஏற்பட்ட முரண்பாடுகள் எனவும் கூறப்படுகிறது.

எதுஎவ்வாறுயினும் எம்.பி.யின் தம்பியின் அட்டகாசங்களுக்கு இது ஓர் தல்ல பாடம் என அப்பாவி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இதே நபர் சில நாட்களுக்கு முன் அப்பாவித் தமிழரிடம்சேட்டைவிடப் போய் தனது மண்டையை உடைத்துக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ந.நி)

கரந்தடிப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரையாக்கப்பட்டதுடன் அவர்கள் எடுத்து சென்ற இரண்டு மினி பஸ்களும் தீக்கிரையாக்கப்பட்டதாம்.

இச்சம்பவம் பற்றி கருத்து கூறிய பெரியவர் ஒருவர் 'செட்டிக்கு வெள்ளாண்மை செண்மத்து பகை' என ஒப்பீட்டு உவமை கூறி சிரித்தார்.

(ந.நி)

தன்மான தமிழர் படை பெறுகிறது!

வட-கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராட இளைஞர்களை கட்டாயமாக பயிற்சிக்கு திரட்டும் அன்னிய உளவு படையின் உத்தரவுக்கு அமைய அன்னிய கைக்கூலிகளின் நடவடிக்கைகளை எதிர்த்து சொந்த மண்ணை மீட்கும் போரில் தம்மை அர்ப்பணித்துவரும் தன்மான தமிழர் படையான விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தாமாக சென்று நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இணைந்து வருகிறார்கள் என வட-கிழக்கு மாகாணங்களில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. (ந.நி)

ஏஜன்சி விதானைகள்

மட்டகளப்பு மாவட்டத்தில் முற்றுக தமிழர்கள் வாழும் தொகுதியில் அடங்கும் வெற்றிலைக்கு பெயர் போன கிராமம் ஒன்றிலும் அதன் அருகில் இருக்கும் கிராமம் ஒன்றையும் சேர்ந்த இரண்டு கிராமத்து சேவையாளர்களான நாவுக்கரசரும் இரத்தினமானவரும் வெளி நாட்டு ஏஜென்சி சப்பும் தொழிலும் கடவைசிட்டு தரகு பணிகளிலும் வெகு மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனராம். இவர்களின் மேலதிக தொழில் காரணமாக பெரும்பாலும் இவர்கள் கொழும்பில் தங்கி கொள்வதால் அப்பாவி மக்கள் இவர்களை சந்தித்து தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாது தவிக்கின்றனராம் இவர்களை நாடிவரும் மக்களுக்கு இவர்களின் சப்பு வடிவான ஒருவர் அழகாக ஏமாற்றி அனுப்பு வதுடன் அப்பாவிகளை சுரண்டுவதிலும் கண்ணியமாக நடந்துகொள்கிறார் எனவும் கூறப்படுகிறது.

இத்தினமானவர் கிருபையுடன் சேர்ந்து வீட்டுத் திட்டத்துக்கு காடுவெட்ட வென சைப்பிரசுக்கு இளைஞர்களை அனுப்புவதாக கூறி அரச வெளிநாட்டு வேலை விண்ணப்பப் படிவங்களை கொழும்பில் ஒரு ரூபா ஐம்பது சதத்துக்கு வாங்கி அப்பாவி மக்களுக்கு ஐம்பது ரூபாவுக்கு விற்றதுடன் கடவைசிட்டு பெற எனவும் பலஆயிரம் ரூபாய்களையும் ஏற்கனவே ஏப்பம் விட்டவடு மாறு முன் மீண்டும் தனது கைவந்த கலையை ஆரம்பித்து விட்டாராம் என மக்கள் அங்கலாய்ப்புடன் பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களாக இப்படிப் பட்டவர்களை தொடர்ந்தும் சேவையில் இருத்தி வைக்காது படித்த தொழிலற்ற வாலிபர்களை புதிதாக இவர்களின் இடங்களுக்கு நிரப்பினால் பொது மக்களின் சிரமங்களும் குறையும் படித்த வாலிபர்களின் தொழில் பிரச்சினையும் குறையும் ஏனைய ஊழியர்களும் மிகவும் அவதானமாக நடக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துவதாகவும் இருக்கும். அரசாங்கத்தின் மதிப்பும் மக்கள் மத்தியில் உயர்ந்துவிடும் என அப்பகுதி கிராம மக்கள் அங்கலாய்க்கின்றனர். (ந.நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கைகள் பின் வருமாறு கூறுகின்றன

தமிழீழ விடுதலைப் பாதையில் உண்மைக்கு முரணை படுகொலைகள் தொடர்கின்றன

தொண்டர் படைக்கு சேர்கின்றவர்களுக்கு ஊதியமும், உணவும், உடையும் வழங்கப்படும் என ஆசைகள் காட்டி தொண்டர் படைக்கு ஆள் திரட்டினார்கள். இவ்வாறு மோசவலையில் வீழ்ந்த தமிழ் இளைஞர்கள் பின்னரே சிந்திக்கலானார்கள். அநியாயப்படுகொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், தலைத்தல் போன்ற செயல்கள் தமிழ் மக்கள் மீது கட்டுக்கடங்காமல் நிகழலாயின. மறுபுறம் ஏமாற்றம். இது தொண்டர் படைக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. அநீதியின் பக்கம் நிற்காமல் நீதிக்கு தலைவணங்க பலர் முன் வந்தனர். சிலர் ஆயுதங்களுடன் எம்மிடம் சரணடைந்தனர். பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். சிலர் எம்முடன் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தில் குதித்தார்கள்.

இவ்வாறு தப்பிவந்தவர்களின் குடும்பங்களை துரோகக் கும்பல்கள் தாக்கலானார்கள். பலர் உயிரிழந்துள்ளனர். பலர் ஊனமையாகியுள்ளனர். அண்மையில் ஆயுதங்களுடன் எம்மிடம் சரணடைந்த சி. வி. எப். பயிற்சிமுடித்த மரியநேசன் என்பவரின் தந்தை திரு. செல்வநாயகம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) என்பவரை வெட்டிக் கொலை செய்தனர்.

எமது இயக்க உறுப்பினர்களின் தகப்பன், சகோதரர்கள், உறவினர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். அண்மையில் எமது இயக்க உறுப்பினர் விமலின் சகோதரன் ரவி பாதுகாப்பு காரணங்களுக்காக திருகோணமலையில் தங்கியிருக்கும் போது சி. வி. எப். பயிற்சிக்கு ஆள் திரட்டும் போது பிடிபட்டார். அங்கிருந்த துரோகிகளினால் இவர் இனங்காணப்பட்டு பின்னர் அடித்து, சித்திரவதை செய்து படுகொலை செய்யப்பட்டார்.

எமது இயக்கஉறுப்பினர் விஜேதனின் சகோதரன் பவாந்தரராசாவையும், களுவாஞ்சிக்குடி ஈ பி ஆர் எல் எப் முகாமில் வைத்து ஒடச் சொல்லி துப்பாக்கியால் கட்டுக்கொன்றார்கள். இவர் பட்டிருப்பு மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன். இதேபோல் எமது இயக்கஉறுப்பினர் கிருஸ்ணனின் சகோதரர் ராமனையும் ஈ பி ஆர் எல் எப் கும்பல் படுகொலை செய்துள்ளனர். கிருஷ்ணு ஏற்கனவே இலங்கை இராணுவத்தினால் கொலை செய்யப்பட்டவர்.

எமது இயக்க உறுப்பினர்களின் தகப்பன், சகோதரர்கள், உறவினர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். அண்மையில் எமது இயக்க உறுப்பினர் விமலின் சகோதரன் ரவி பாதுகாப்பு காரணங்களுக்காக திருகோணமலையில் தங்கியிருக்கும் போது சி. வி. எப். பயிற்சிக்கு ஆள் திரட்டும் போது பிடிபட்டார். அங்கிருந்த துரோகிகளினால் இவர் இனங்காணப்பட்டு பின்னர் அடித்து, சித்திரவதை செய்து படுகொலை செய்யப்பட்டார்.

எமது இயக்கஉறுப்பினர் விஜேதனின் சகோதரன் பவாந்தரராசாவையும், களுவாஞ்சிக்குடி ஈ பி ஆர் எல் எப் முகாமில் வைத்து ஒடச் சொல்லி துப்பாக்கியால் கட்டுக்கொன்றார்கள். இவர் பட்டிருப்பு மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன். இதேபோல் எமது இயக்கஉறுப்பினர் கிருஸ்ணனின் சகோதரர் ராமனையும் ஈ பி ஆர் எல் எப் கும்பல் படுகொலை செய்துள்ளனர். கிருஷ்ணு ஏற்கனவே இலங்கை இராணுவத்தினால் கொலை செய்யப்பட்டவர்.

எமது இயக்க உறுப்பினர்களின் எழிலின் உறவினர் இளைதம்பியும் படுகொலை செய்யப்பட்டார். இவர் 09 பிள்ளைகளுக்கு தந்தையாவார். எமது ஆதரவாளர் எனக்கூறி தும்பங்கேணி ஐ பி கே எப் முகாமில் வைத்து ஒரு அப்பாவிப் பொது மகனை இந்திய ராணுவமும் ஈ என் டி எல் எப் சேர்த்து அடித்துக் கொலை செய்தனர்.

மேலும் சி வி எப் பயிற்சிக்கு பலவந்தமாகக்கூட்டிச்சென்ற இளைஞர்களில் தப்பிச் செல்லும் போது பிடிபடுகின்றவர்களை வெட்டிக் கொலை செய்கின்றார்கள்.

எமக்கு வெல்லாவெளிப் பொது மக்கள் ஆதரவு செய்கின்றார்கள் எனக்கூறி தேசத்துரோகக் கும்பல்கள் அறுவடைக்குத் தயாராக உள்ள நெல்வயல்களில் அறுவடையை மேற்கொள்ள வேண்டாம் எனத் தடை விதித்துள்ளனர். தமது குடும்ப கஷ்டங்களை தாங்காமல் தடையை மீறி இருவர் வயலுக்கு சென்று விட்டனர். அவர்கள் அறுவடை செய்த காரணத்தினால் இருவரது கைகளையும் அடித்து உடைத்து விட்டனர். இதனால் பீதியடைந்த மக்கள் அறுவடை செய்யாமல் உள்ளனர். கவனிப்பாரற்ற நெல்வயல்கள் சேதமாகியும் கால்நடைகளினால் அழிந்தும் போகின்றன.

எம்முடன் நேரடியாக மோத இயலாத ஆயுதம் ஏந்திய துரோகக் கும்பல்கள் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து அப்பாவிப் பொது மக்களை தாக்கியும்,

(6ம் பக்கம் பார்க்க)

தொண்டர் படையினருக்கு

தமிழீழ விடுதலைப் போரை, தமிழீழ மக்களை அழித்தொழிக்கும் நோக்குடனேயே இந்திய இராணுவம் எமது மண்ணிற் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழீழ மக்கள் மீது இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் புரியும் கொடுமைகளை நியாயப்படுத்தவும், உலகிற்கு மறைக்கவும் தமிழீழத்தில் ஒரு கும்பல் தேவைப்பட்டது. சமூக விரோத, தேசத்துரோகச் செயல்களில் ஈடுபட்டு தமிழீழ விடுதலைப்போராட்டக் களத்திலிருந்து மக்களால் அப்புறப்படுத்தப்பட்ட மக்கள் விரோதக் குழுக்களை 'தமிழீழ மக்களின் பிரதிநிதிகள்' என பிரச்சாரம் செய்தது.

அம்மக்கள் விரோதக்கும் பலுக்கு சட்டப்பூர்வ தகுதி ஒன்றை வழங்குவதற்காக இந்திய ஆக்கிரமிப்பாளர்களால் உருவாக்கப்பட்டதுதான் மாகாணசபை.

இவ்விதம் தமிழீழ மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கையை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் மாகாணசபையை பாதுகாக்கவென ஆக்கிரமிப்பாளர்களால் அமைக்கப்பட்டதுதான் தொண்டர் படை.

அதாவது தமிழீழ மக்களை அழித்தொழிப்பதற்கு இந்திய இராணுவத்திற்கு உதவியாக அமைக்கப்பட்ட படைதான் தொண்டர் படை ஆகும்.

'வாகனங்களைச் சோதனையிடவும்', 'முறைப்பாடுகளை விசாரிக்கவும்' என்று கூறித்தான் தொண்டர் படைக்கு ஆள் சேர்க்கப் படுகின்றது. அத்துடன் 2500 ரூபா சம்பளம் என்று ஆசைகாட்டி அப்பாவித் தமிழ் இளைஞர்களைச் சேர்த்த பின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டைகளில் தொண்டர் படையினரை முன்னே தள்ளிச் சண்டையிட வைத்து சாகடிக்கும் நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அத்துடன் அப்பாவித் தமிழ்மக்களை எந்த விதக் கேள்விகளுமின்றி அடித்துத் துன்புறுத்துவதற்கு வாய்ப்பாக அவ்விளைஞர்களின் மனதிலை கெடுப்பதற்கு போதை வஸ்துக்களைக் கொடுத்து மிருகங்களைப்போலதொண்டர் படையினரை இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் வளர்க்கின்றனர். தொண்டர் படையினரும் சுயசிந்தனை இழந்த நிலையில் தமிழ் மக்களைக் கொடுமைப் படுத்துகின்றார்கள்.

தொண்டர் படையிற் சேர்ந்துகொண்டபின் உண்மை நிலைமைகளை அறிந்து பல இளைஞர்கள் ஆயுதங்களுடன் தப்பி ஓடி எம்மிடம் வந்து சேர்ந்துள்ளனர். அத்தகைய இளைஞர்களை மன்னித்து மறு வாழ்வு அளித்துள்ளோம்.

அன்பான தமிழீழ மக்களே!

இந்தச்சூழ்நிலைகளை அறியாமல் தொண்டர் படையிற் சேர்ந்துவிட்ட இளைஞர்களே! நீங்கள் எந்தவித தயக்கமும் கொள்ளாது உங்களது ஆயுதங்களுடன் உடனடியாக வந்து எம்மிடம் சரணடையுங்கள் உங்களுக்குத் தகுந்த பாதுகாப்புடன் புதிய வாழ்க்கையைத்தொடங்குவதற்கு வசதிசெய்து தரப்படும்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

அரசியல் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழரை தாக்கியவருக்கு சிங்களராணுவம் தண்டனை

மனிதாபிமான மற்ற இச்சம்பவம் தலைநகரில் தமிழர் பெரும்பான்மையாக வியாபாரம் செய்யும் பகுதியில் உள்ள தமிழருக்கு சொந்தமான சைவ ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றுள்ளது; மேலும் இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: பசியின் கொடூரம் தாங்கமுடியாது ஐம்பது வயது மதிக்கத்தக்க பிச்சைக்கார வயோதிபர் ஒருவர் மேற்படி பகுதியில் கூறப்பட்ட சைவ ஹோட்டலுக்கு சென்று ஏதாவது உணவு தரும்படி மன்றாடியபோது ஹோட்டல் சிப்பந்தி ஒருவரால் பொல்லால் தலையில் தாக்கப்பட்டு வெளியே தள்ளப் பட்டுள்ளார். இப்பெரியவர் தலையால் இரத்தம் பெருக வீதியால் நடந்த கொண்டிருந்த சமயம் அவ்வழியே ரோந்து வந்து கொண்டிருந்த பொலிஸ் வாகனம் ஒன்று இவரது இரத்த காயத்தை கண்டு வாகனத்தை நிறுத்தி விசாரித்து அவரை சம்பவம் நடந்த ஹோட்டலுக்கு அழைத்து சென்றுள்ளனர். இதே சமயம் அவ்வழியே ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த சிங்கள கடற்படை வீரர்களின் வாகனம் ஹோட்

(4ம் பக்கம் பார்க்க)

300 யார் வயரின் பெறுமதி 12 தமிழர்களின் உயிர்

இக்கொடிய சம்பவம் பற்றி கூறப்படுவதாவது: அண்மையில் பருத்தித்துறையில் அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவத்தினரின் தொலை தொடர்பு வயர்களில் கிட்டத்தட்ட முன்நூறு யார் வயர்களை யாரோ திருடர்கள் வெட்டியதற்காக அப்பாவி தமிழர்கள் பன்னிருவர் அன்னிய ராணுவ அரக்கர்களால் படுகொலை செய்யப்பட்ட பரிதாபகரமான சம்பவம் நடைபெற்றுள்ளது. இப்பன்னிருவரில் இ.போ.ச. பஸ் நடத்துனர் ஒருவரும், மெக்கானிக் ஒருவரும் அடங்குவர். எடுத்ததற்கெல்லாம் அப்பாவி தமிழர்கள் அன்னிய அரக்கர்களால் படுகொலை செய்வதும் அவர்களின் கைக்கூலிகள் அதை நியாயப்படுத்துவதும் நடைமுறையாகி வருவது தமிழ் சமூகத்துக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் நடைமுறைகள் என்பதை மக்கள் உணர்ந்து இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக போர் தொடுக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது என விடயம் தெரிந்த சிலர் பேசிக் கொண்டனர்.

(நமது நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார வெறியர்களின் அட்டகாசத்தால் அப்பாவி தமிழ் இளைஞர் - யுவதிகளின் அடிவயிற்றில் நெருப்பு!

சனசவிய திட்டத்தின் அடிப்படையில் நாடு முழுவதும் 25,000 பயிற்சி ஆசிரியர்களை நிரட்ட மத்திய அரசு திட்டம் தீட்டி அதை செயலுருப்படுத்த ஆரம்பித்துவிட்டனர். ஆனால் இவ் அரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வட-கிழக்கு வாழ் ஏழை தமிழ் இளைஞர்-யுவதிகளின் எதிர்பார்ப்பு ஆண்டி மடம் கட்டிய கதையாக முடிந்து விட்டது. இவ்வாறான ஆசிரிய பதவிக்கு விண்ணப்பித்த விண்ணப்ப தாரிகளுக்கு நேர்முக பரீட்சைக்காக மத்திய அரசால் அனுப்பி வைக்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் வட-கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சிக்குண்டர்கள் மாகாண கல்வி அலுவலகங்களுக்குள் நுழைந்து அதிகாரிகளை ஆயுத முனையில்மிரட்டி பலாத்காரமாக பறித்து சென்றிருக்கிறார்கள். சட்டத்தையும், ஒழுங்கையும் அமுல் செய்யவேண்டிய ஓர் நிர்வாகம் கையாண்டிருக்கும் நடைமுறையை பார்த்தால் தமிழ் புலவர் ஒருவர் பாடிய பாடல் உதாரணமாகிறது

நாய் வாலை அளவெடுத்து நறுக்கி தீட்டின்
நல்லெழுத் தெழுதும் எழுத்தாணியாமோ?
பேய் வாழும் சுடுகாட்டை பெருக்கி தள்ளி
தெரு விளக்கை ஏற்றி விட்டால் வீடாதாமோ?

இது ஒருபுறம் இருக்கட்டும். ஒரு முதலமைச்சரின் கீழ் வருகின்ற மாகாண கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட விடயத்தில் இவர்கள் இவ்விதமாக நடந்து கொண்டது. இவர்கள் நிர்வாகத்துக்கு எந்த வகையிலும் பொருத்தமில்லாதவர்கள் என்பதை புடம்போட்டு காட்டிவிட்டது.

இக் கிழ்த்தரமான செய்கைக்கு இவர்கள் இடத்துக்கு இடம் வெவ்வேறு காரணங்கள் கூறுகிறார்கள். திருகோணமலையில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் பெரும்பான்மையாக விண்ணப்பித்திருப்பதால் தான் அங்கு தாங்கள் இக்கேவலத்தை புரிந்ததாக கூறுகிறார்கள். இவர்களின் இக்கூற்று வடிகட்டிய பிரதேச வாதம் என்பது சொல்லி தெரிய வேண்டிய தொன்றில்லை. வட-கிழக்கு நிரந்தரமாக இணைந்த மாகாணசபை கோருபவர்களின் இக்கூற்று மக்களை ஏமாற்றும் நடவடிக்கையே. மட்டக்களப்பில் இவர்கள் கூறும் காரணம் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குமுகமாகவே தாம் இக்கேவலங்களை புரிந்ததாக கூறுகிறார்கள்: (தொண்டர் ஆசிரியர்களின் நிலைப்பாட்டை வேறு கட்டுரையில் ஆராய்வோம்)

இது எந்த வகையிலும் உண்மையாகாது. ஏனெனில் இப்பரீட்சைக்கு தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிந்தவர்களுக்கு விசேடமான சில முன்னுரிமைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே தொண்டர் ஆசிரியர்கள் இவ்விடயத்தில் அச்சப்படவேண்டிய அவசியம் இருப்பதாகதெரியவில்லை. தேர்தல் காலத்தில் இவர்கள் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவோம் என பொய்யான வாக்குறுதிய அளித்தவர்கள் என்பது உண்மையே அதை நிறைவேற்ற இவர்கள் அதற்கேற்ற அணுகு முறைகளை கையாண்டு நிறைவேற்றி வைப்பதற்கு முடியாது. தொண்டர் ஆசிரியர்களை ஏவி விட்டு உண்ணுவிரத நாடகத்தை அரங்கேற்றியதும் பின்னர் தாம் ஏதோ வெட்டி புடுங்க போவதாக வாக்குறுதி கொடுத்து தொண்டர் ஆசிரியர்களின் உண்ணுவிரதத்தை முடித்து வைத்ததும் நடந்து முடிந்த நாடகங்கள். ஆனால் உண்மையில் இவர்கள் இத்தனை கூத்துகளையும் அரங்கேற்றிய அடிப்படையை தொண்டர் ஆசிரியர்கள் சரியாக இனங்கண்டு கொள்ள தவறி விட்டனர்.

சனசவிய திட்டத்தின் ஆசிரியநியமனத்தை மாகாண சபை முற்று முழுதாக தமது கையில் பெற்றெடுத்து தமது கையாட்களை நிருப்தி படுத்துவதன் மூலம் தாம் வட-கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் பெரியதொரு செல்வாக்கை பெற்று விடலாம் என்ற அடிப்படை திட்டத்திலேயே இவர்கள் இக்கொடூரத்தை புரிந்திருக்கிறார்கள். மத்திய அரசு இவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளை கண்டும் காணாதது போல் இருப்பதை விடுத்து வட-கிழக்கு மாகாணசபையின் அத்து மீறல்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும்.

(வசந்தன்)

ஆட்டுக்கு ஈடாக தமிழ் இளைஞர்கள் தமிழ் சமூகம் திட்டமிட்டு அளிக்கப்படுகின்றது

கடந்த சில மாதங்களாக வட-கிழக்கு மாகாணங்களில் பலாத்காரமாக பிடிக்கப்பட்ட கட்டாய பயிற்சி அளிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களை அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவமும் அவர்களின் அடிவருடிகளான எட்டப்பர் கூட்டங்களுமாக சேர்ந்து தன் மானத்துடன் தாய் நாட்டை மீட்டெடுக்கும் பயங்கரக்காடுகளில் அமைந்திருக்கும் வீரப்போராளிகளான விடுதலைப்புலிகளின் மறைவிடங்களை கண்டு பிடிக்கும் முயற்சிக்கு பயன் படுத்தப்படப்போகிறார்களாம். இதற்கு முன்னோடியாக திருகோணமலை நகரில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் நிலாவெளிகிராமத்தை அண்டியுள்ள காடுகளில் தேடுதல் வேட்டையில் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள் என நம்பகரமாக அறியக்கூடியதாக உள்ளது.

இவ்விஷப்பரீட்சை பயங்கரமானது என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. காடுகளில் முகாம்களை அமைத்துள்ள புலிகள் தமது இருப்பிடங்களை சுற்றி பல மைல் தூரங்களுக்கு கணணி வெடிகளையும், பொறி வெடிகளையும் பொருத்தியுள்ளார்கள். புலிகள் பொருத்திய இப் பயங்கர வெடிகள் அன்னியரைப் பலி கொள்ளவே தவிர எமது தமிழ் இளைஞர்களை பலி கொள்ள அல்ல என்பது தெளிவான உண்மை. இப் பயங்கரத் தாக்குதல்களில் இருந்து தப்பித்துக்கொள்ள அன்னியப்படை ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து ஆடுகளை வரவழைத்து பலி கொடுத்தது. மறந்து விட்டிருக்க முடியாது. இந்திய ஆடுகளைவிட இலங்கைத் தமிழ் இளைஞர்களின் உயிர்கள் பெறுமதி குறைந்தது எனக் கருதியே அப்பாவி தமிழ் இளைஞர்களை புலிகளின் தாக்குதலுக்கு பலி கொடுக்க இந்திய ராணுவமும் அவர்களின் அடிவருடிகளும் திட்டமிட்டு செயல்படுத்திட்டிய திட்டத்தின்படி அப்பாவி தமிழ் தமிழ் இளைஞர்கள் பெருமளவில் பலியிடப்பட போகிறார்கள். திட்டமிட்டு எமது தமிழ் சமூகம் அழிக்கப்படுகிறது என வட-கிழக்கு மாகாண தமிழர்கள் இரத்தக்கண்ணீர் சிந்துகிறார்கள்: (ந. நி.)

தமிழரை ...

(3ம் பக்கத்தொடர்)

டல் ஒன்றின் முன் பொலிஸ் வாகனத்தையும் மக்கள் கூட்டத்தையும் காணவே தமது வாகனத்தை நிறுத்தி விசாரித்து பார்த்ததில் முதியவர் தாக்கப்பட்ட விடயம் அவர்களுக்கு தெரியவந்ததும் மனிதாபிமானம்கொண்டு கொதித்து பெரியவரை தாக்கிய சிப்பந்திக்கு செம்மையான உதை கொடுத்து தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கும்படி பொலிசாருக்கு கையளித்துவிட்டு காயத்துக்குள்ளான பெரியவரை சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனராம்.

இச்சம்பவத்தை கவனித்துக்கொண்டிருந்த வட-கிழக்கு தமிழர்கள் தமது பகுதிகளில் தமிழர்களை பாதுகாப்பவர்கள் எனக் கூறிக்கொள்ளும் அரக்க தனமானவர்களால் தினமும் தமிழர்கள் சொறிநாய்கள் சுட்டு படுகொலை செய்யப்படுவதை திட்டிக்கேட்க யாருமில்லாத நிலையில் தென்னிலங்கையில் தமிழர்களின் பாதுகாப்புக்கு எத்தகைய உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது என ஏக்க பெருமூச்சுடன் கூறிய துடல் சிங்கள கடற்படை வீரர்களின் மனிதாபிமான நடவடிக்கையை மனமார பாராட்டினராம்.

நிருபர்கள் தேவை

உண்மை பத்திரிகைக்கு நாடெங்கிலும் நிருபர்கள் தேவை. தொடர்புகொள்ளவும்:
ஆசிரியர்,
உண்மை பணியகம்,
65, பெரிகிஸன் வீதி,
கொழும்பு 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஆசிரியர் பேசுகிறார்

நேயர்களே உங்களில் பலர் உண்மைக்கு அனுப்பியுள்ள மடல்கள் கண்டு நான் உள்ளம் பூரிக்கின்றேன். உங்களின் மடல்களே உண்மையில் பிரசுரிக்க வேண்டும் என பலர் அன்புக்கட்டளை இட்டுள்ளீர்கள். உங்கள் கட்டளையை ஏற்று உடனடியாக அதை நிறைவேற்றி வைக்க முடியாமைக்கு வருந்துகின்றேன். 15 நாட்களுக்கு ஒரு தரம் வெளியாகும் உண்மை பல விடயங்களை சுமந்து வரவேண்டியுள்ளது. எத்தனையோ விடயங்கள் காலதாமதமாக வெளிவரவேண்டிய அளவுக்கு உண்மையில் இடநெருக்கடி உள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள். உண்மை வியாபார நோக்கில் வெளிவரும் பத்திரிகை அல்ல. விளம்பரங்களுக்குக்கூட உண்மையில் இடம் ஒதுக்க முடியாத நிலை அதுமட்டும் அல்ல, புகைப்படங்களை பிரசுரித்தும் இடத்தை விரயம் செய்ய முடியாத நிலையிலேதான் உண்மை வெளிவருகின்றது. உண்மை வாராந்த பத்திரிகையாக வெளிவர ஆரம்பித்ததும் உங்கள் கட்டளை நிறைவேற்றப்படலாம்.

அனேகமான வாசகர்கள் உண்மை பற்றிய பல சந்தேகங்களை அறிய ஆவலாக உள்ளதை உங்கள் மடல்கள்மூலம் அறியக்கூடியதாக உள்ளது. உண்மை ஒரு பக்க சார்பானதா என்ற சந்தேகமே பலவாசகர்களின் கடிதங்களில் எழுப்பப்பட்டுள்ள கேள்வி.

உண்மை நிட்சயமாக ஒரு பக்கச் சார்பானதல்ல என்பதை உங்களுக்கு உறுதியாக நான் கூறிவைக்க விரும்புகின்றேன். இன்றைய வட-கிழக்கு மாகாண தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அட்டூழியங்களை செய்திகளாகவும் விமர்சனக் கட்டுரைகளாகவும் வெளியிடும் போது அது அன்னிய ஆதரவை நாடி நிற்கும் வட-கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சியையும் அவர்களின் நேச அணிகளையும் தாக்கத் தான் செய்யும் அதற்காக உண்மை அவர்களுக்கு எதிரானதென கருத முடியாது. அவர்கள் ஏதாவது ஒரு நல்ல காரியமாவது செய்தால்தானே அவர்களை பாராட்ட முடியும். அவர்களோ எமக்கு நல்ல காரியங்களே செய்ய முடியாது என அடம் பிடிக்கையில் நான் எப்படி அவர்களை பாராட்ட முடியும். இது அன்னிய ஆதரவாளர்கள் பற்றிய உண்மையின் நிலைப்பாடு.

அடுத்து விடுதலை புலிகள் பற்றியது. விடுதலை புலிகளை பொறுத்தவரையில் அவர்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் குறியாக இருப்பது மட்டுமல்ல, இவ் ஈழ மண்ணித்திருநாட்டில் தமிழர்களின் பங்கை வலியுறுத்தி ஈழ தமிழர்களின் நாமத்தை பயன்படுத்தி எமது தாய்நாட்டை ஏப்பம்விட திட்டம் தீட்டி செயல்படும் உலகின் நான்காவது பெரிய படையான இந்திய படையை கண்டு பயந்து ஒதுங்கி விடாமல் எமது தாயகத்தை மீட்டெடுக்கும் பணிக்காக தமது இன்னுயிரை பணயம் வைத்து போராடிவரும் வீரர்கள். விடுதலைபுலிகளின் வீரத்தை உலகநாடுகள் அனைத்தும் போற்றி பெருமை படுகையில் அவர்கள் பிறந்த சமூகத்திலும் மண்ணிலும் பிறந்தநான் மட்டும் அவர்களின் வீரத்தையும் யுத்த சாகசத்தை பாராட்டி எழுதுவதில் என்ன தவறு இருக்க முடியும். உண்மையான வீரர்களை நாம் பாராட்டும் பொழுது அவர்களது வீரம் மேன்மேலும் உறுதியாகும். நாம் அவர்கள் மீது அர்த்தமற்ற குறைகளை கூறினால் அவர்களது மனம் சோர்ந்து வீரப்போராட்டம் வலுக் குறைந்தாலும் குறைந்துவிடலாம். இந்த மாபெரும் துரோகத்தை தமிழனாகப் பிறந்த நான் எப்படி செய்யமுடியும் எனது சொந்த சகோதரர்களின் வீரத்தை பாராட்டி எழுத உண்மை மூலம் எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நான் பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். நான் மட்டுமல்ல, இலங்கை மண்ணில் பிறந்த ஒவ்வரு தமிழனும் வீரப்புலிகளினால் பெருமையடைகின்றான் எனக்கூறின் அது தவறாகாது. எனவே நான் விடுதலை புலிகளுக்கு வக்காலத்து வாங்குகின்றேன் எனக்கூறுவது அபாண்டமானது.

நான் உண்மையில் உண்மை பத்திரிகையை வெளியிட ஆரம்பித்ததே எமது தாய்நாட்டை ஏப்பம் விட முனைகின்ற சக்திகளின் கைக்கூலி எழுத்தாளர்களால்விடுதலை புலிகள் வீணாக களங்கப்படுத்தப்படுவதை கண்டு பொறுக்க முடியாத வேதனையால் மட்டுமன்று எனது சொந்த சமூகத்தை துயரத்துக்குள்ளாக்கும் கைக்கூலிகள் அன்னியர் பெற்றுக்கொடுத்த அற்ப பதவிகளை கொண்டு விவஸ்தை கெட்டதானமான அறிக்கைகளை விடுத்து எமது மக்களின் உண்மை துயரை மூடி மறைக்கும் முயற்சிகளுக்கு பதிலடி கொடுப்பதற்காகவுமே. எனது முயற்சியால் நான் ஓரளவு திருப்தி அடைகின்றேன். தற்சமயம் பல வாசகர்கள் தமது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் உண்மை பத்திரிகையை வெளிநாடுகளுக்கு அனுப்புவதனால் வெளிநாடுகளில் வாழும் எமது சமூகத்தவரும் நமது சமூகம் இங்கு படுகின்ற அல்லல்களை அறிய உதவியாகிவிட்டது. எனவே உண்மையை தன்மானமுள்ள சமூகப்பற்றுள்ளவனின் குரலாக பார்க்க வேண்டுமே தவிர ஒருபக்க சார்பானதென்ற கண்ணோடு பார்ப்பது தவறானது.

நன்றி
உங்கள் நல் ஆதரவை நாடும்

உண்மை ஆசிரியர்

தீபங்களே தீப்பந்தமாக்காதீர்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

காரணம். வட-கிழக்கு மாகாணசபை தேர்தலில் மு. கா. போட்டியிடுவதற்காக இந்திய ராஜதந்திரியுடன் பேச்சுவார்த்தை நடாத்திய போது ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என நிபந்தனை விதித்திருக்க வேண்டிய மு. கா. அதை விடுத்து தேர்தல் செலவுகளுக்கான பேரம் பேசி கொடுப்பனவை பெறுவதில் குறியாக இருந்தது மட்டுமல்லாது ஜனநாயகத்துக்கு விரோதமான தேர்தலை நியாயப்படுத்தி இந்திய ராணுவத்துக்கு நன்றிகள் பல கூறியபோது ஞாபகம் வராத விடயம் தற்சமயம் வந்ததன் மர்மம் என்னவோ? மு. கா: தலைவர் என்னதான் ஒப்பாரி வைத்தாலும் இனியும் முஸ்லிம்கள் ஏமாறதயாராகஇல்லை என்பது மட்டு தெளிவு.

4. முஸ்லிம் காங்கிரஸ் அன்னியப்படைவெளியேறுவதை விரும்புகிறதாம்! இந்திய ராணுவம் வெளியேறினால் அதற்கு மறுநினமே முஸ்லிம்கள் அழிக்கப்பட்டு விடுவார்கள் என உரத்துக் கூறியவர் முஸ்லிம் மக்கள் தாக்கப்படும்போதெல்லாம் எமக்கு இந்திய ராணுவ பாதுகாப்புவேண்டாம். இலங்கை ராணுவ பாதுகாப்பு தேவை என முஸ்லிம்கள் மன்றாடிய போதெல்லாம் முஸ்லிம்களை இந்திய ராணுவம் பாதுகாக்கிறது எனகூறி முஸ்லிம்களுக்கு எதிரான இந்திய ராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தியவர் இன்று இந்திய ராணுவம் வெளியேறுவதை விரும்புகிறாராம். மு. கா.சின் இன்றைய குழப்பமான நிலையை வெளிப்படுத்திவிட்டது அதன் தலைமை.

5: முஸ்லிம்களையும் ஆயுதம் ஏந்த வைக்காதீர்கள். இதே குரலை அன்று திரு. அ. அலிர்தலிங்கம் உரத்து கூறியதன் விளைவே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த தூண்டியது. அதே ஆயுதங்களால் இன்று அப்பாவித் தமிழ் இளைஞர்களும் தமிழ் சமூகமும்எண்ணில்லாஅழிவுகளுக்கு ஆளாக்கப்பட்டு இதில் இருந்து எப்படி தப்பிக்கலாம் என வழிதேடிக் கொண்டிருப்பதை கண்கூடாக கண்டபின்னரும் உண்மையான ஒரு சமூகப் பற்றுள்ள சாதாரண மனிதன் கூறமாட்டாத வார்த்தையை மு. கா. தலைமை நாகூசாது கூறியிருக்கிறது என்றால் அவர்களது பதவி மோகம் எவ்வளவு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது எனபதை உணர்ந்து கொள்ளலாம். முஸ்லிம் சமூகத்தின் ஒளிவிளக்காக விளங்கும் இளைஞர்கள் என்னும் தீபத்தை சமூகத்தை சுட்டெரிக்கும் தீப் பந்தங்களாக மாற்றுவேன் என கூறியதற்கு ஒப்பானதே முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்த வேண்டி வரும்என்ற வார்த்தைகள். மு. கா. என்னதான் பிதலாட்டம் பண்ணினாலும் இனிமேலும் முஸ்லிம்களை ஏமாற்ற முடியாத அளவுக்கு முஸ்லிம் காங்கிரசின் அந்தரங்க சுயநல நோக்கங்களை முஸ்லிம் மக்கள் சரியாக இனம் கண்டு கொண்டனர்.

6. முஸ்லிம்கள் ஒன்று படப்போகிறார்கள்: உண்மைதான். முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம்கள் நிராகரித்துவிட்டால் முஸ்லிம்கள் ஒன்றுபட்டுவிட்டார்கள் என்று தானே அர்த்தம். ஒன்றுபட்ட முஸ்லிம்கள் நிச்சயமாக இனிமேலும் மு. கா. போன்ற சுயநல இனவாத அமைப்புக்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதும் உறுதி.

(ஹனிபா)

நலன்புரி முகாம் இளைஞர்கள்
உண்ணாவிரதம்!

வட-கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் கட்டாய ஆள்பிடி நடவடிக்கைகளில் இருந்து தப்பி கொழும்பு பம்பலபிட்டி இந்துக்கல்லூரி நலன் புரி முகாமில் அடைக்கலம் புகுந்துள்ள தன்மான தமிழ் இளைஞர்கள் நியாக தீபம் நிலீபனின் 2 வது ஆண்டு சிரார்த்த தினத்தன்று முகாம் அமைந்துள்ள இந்துக் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டித்து நியாக தீபம் நிலீபனுக்கு தமது அஞ்சலியை செலுத்தி நிலீபனின் நியாகத்தை நன்றியுடன் நினைவுகூர்ந்து கொண்டனர்.

ஈரோசுக்கு இந்திய பாதுகாப்பு

அண்மையில் மாகாண சபை ஆளும் கட்சிக்கும் ஈரோசுக்கும் இடையில் நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து ஈரோசுக்கு இந்திய ராணுவம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்கி வருவதாக கூறப்படுகிறது. இந்திய ராணுவத்தின் இந் நடவடிக்கையை கவனித்த திருமலை மக்கள் ஈபி ஆர் எல் எப்புக்கும் ஈரோசுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் இந்தியப் படையால் திட்டமிடப்பட்டதோ? என்ற சந்தேகத்தை கிளப்பியுள்ளதாக கூறப்படுகிறது. எது எவ்வாறுயினும் ஈரோவின் வெகுநாள் திட்டம் நிறைவேறிவிட்டது என பலபுத்தி ஜீவிகள் அங்கலாய்த்தனர். (ந. நி)

'உண்மை'யின்
வளர்ச்சிக்கு
எமது உளங்கனிந்த
நல் வாழ்த்துக்கள்

ஓர் ஈழ சகோதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தான் வேதம் ஓதுகிறது!

ஒரு முகமூடி கிழிகின்றது

அண்மையில் ஈரோஸ் இயக்க தலைமை தம்மை சந்தர்ப்பவாதிகள், பச் சோந்திகள், விலாங்குமீன் பதவி மோகம் கொண்ட வர்கள் என்றெல்லாம் கூறு கிறார்கள் என குறைபட்டு கொண்டுள்ளனர். கவர்ச்சி மொழி பேசி, தந்திரமான அறிக்கைகள் விடுத்து அப் பாவி மக்களை ஏமாற்றி கவர்வதிலும் தமது காரி யத்தை கச்சிதமாகமுடித்து கொள்வதிலும் ஈரோசை மிஞ்ச இப் பூவுலகில் யாரும் இல்லை என்பதை அரசியல் தெளிவுள்ள புத்தி ஜீவிகள் அனைவரும் உணர்ந் திருப்பர் என்பதில் சந்தேக மில்லை.

கடந்த பொதுத்தேர்தலை அடுத்து இவர்களின் சந் தர்ப்பவாத நிலைபாட்டை அப்பாவி தமிழ் மக்களும் இனம் கண்டு கொண்டுவிட் டார்கள் என்பதை ஈரோஸ் தலைமை உணர்ந்துவிட்ட தன் வெளிப்பாடே, அவர் கள் பத்திரிகைக்கு விடுத் துள்ள அறிக்கை.

எது எவ்வாறுயினும் ஈரோசின் சந்தர்ப்பவாத நிலைபாட்டை அவர்கள் விடுத்த முக்கிய அறிக்கை யின் மூலம் வெகு இலகு வாக இனம்கண்டு கொள்ள முடியும். 1987 ம் ஆண்டு ஜூலை மாதம் கைச்சாத் திடப்பட்ட இலங்கை-இந் திய ஒப்பந்தத்தின் பின் ஈரோஸ் இயக்கத்தினரால் வெளியிடப்பட்ட அறிக்கை களின் மையக் கருத்துக்கள் என குறிப்பிடுபவைகளை சற்று யதார்த்த பூர்வமாக ஆராய்ந்து பார்ப்பின் சந் தர்ப்பவாத முரண்பாடுகள் வெளியாகும்.

1. ஈரோசின் கூற்று:-

இலங்கை-இந்திய ஒப்பந் தத்தின் உள்ளார்ந்த தன் மையைப்புரிந்து கொண்டு ஒப்பந்தத்தை அமுலாக்குவ தில் தடையாக இருக்க மாட்டோம்.

உண்மையின் கருத்து

இலங்கை-இந்திய ஒப்பந் தத்தின் உள்ளார்ந்த தன்மை என்ருல் என்ன? உண்மையின்படி இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் உள் ளார்ந்த கருத்து இந்தியா தனது பிராந்திய நலனை பாதுகாப்பதற்காக எமது சொந்த தாயகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத் திருப்பது இதை ஈரோஸ் சரியாக புரிந்துகொண்டு இலங்கை-இந்திய ஒப்பந் தத்தை அமுலாக்குவதில் தடையாக இருக்கமாட் டோம் என்ருல் அதன் கருத்து வெளிப்படையாக ஆதரவு தரமாட்டோம் அதேவேளை இதை எதிர்த்து இடைஞ்சலாகவும் இருக்க மாட்டோம், (மதில் மேல் பூனை) என பட்டும் படாம லும் இலங்கை-இந்திய ஒப் பந்தத்துக்கு ஆதரவை நல்குகிறார்கள். இந்த வகை யில் நோக்கின் இந்திய அடி வருடி இயக்கங்களுக்கும் இவர்களுக்கும் என்ன வேறு பாடு காணக் கூடியதாக உள்ளது: அவர்கள் தமது வெளிப்பாட்டை ஒழிவு மறைவு இன்றி வெளிப் படையாகவே செயல் படுத்துகிறார்கள். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து அன்னிய ஆக்கிர மிப்புக்குஎதிராகபோராடும் புலிகளுக்கெதிராக இந்தி யப்படைக்கு தமது முழு மையான ஒத்தாசைகளை இந்தியாவுக்கு வெளிப் படையாகவே வழங்கி வரு கிறார்கள். இதன் காரண மாக இவர்கள் மக்கள்மத்தி யில் தமது செல்வாக்குகளை இழந்து வருகிறார்கள். அத் துடன் புலிகளின் தாக்கு தல்களையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாகிறார்கள் அவர்களின் அதே செயற் பாட்டை மறைமுகமாக ஏற்றுக்கொண்ட ஈரோஸ் புலிகளுக்கு தலையையும் இந்தியாவுக்கு வாலையும் விலாங்குமீன் போல்காட்டி தாம் தப்பித்துக் கொள்வ துடன் தமது பொருளா தாரத்தையும் மேம்படுத்தி எல்லோருக்கும் நல்லவராக மக்கள் மத்தியில் கவர்ச்சி வசனம் பேசி தமது அரசி யல் செல்வாக்கை பெருக்கி கொள்வதிலும் குறியாக இருக்கின்றனர். இவ்வா றான சந்தர்ப்பவாத சுயநல நடவடிக்கைகளே ஈரோசை தற்சமயம் பல பக்கங்களி லும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டிய நிர்ப்பந் தத்தை உருவாக்கியுள்ளது என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

2. ஈரோசின் கூற்று:

தமது அரசியல் செயல் பாடுகளுக்கு எவரும் வன் முறை மூலம் தடைவிதிக்க மாட்டார்கள் என்ற நம் பிக்கையில் திருப்திகரமான முறையில் ஆயுத ஒப் படைப்பு செய்திருந்தோம்.

உண்மையின் கருத்து

இலங்கை-இந்திய ஒப்பந் தத்தை ஏற்று திருப்திகர மான முறையில் ஆயுத ஒப் படைப்பு செய்து ஜன நாய்க வழிக்கு திரும்பிய வர்கள் என கூறும் ஈரோஸ் இலங்கை-இந்திய ஒப்பந் தத்துக்கு ஏற்புடையதான வட-கிழக்கு மாகாணசபை தேர்தலில் போட்டியிடா தது புலிகளை திருப்தி படுத் தலாம் என்ற முயற்சியா? அல்லது அன்னிய ஆக்கிர மிப்பு ராணுவத்தின் அடிப் படை நிட்டத்தை நிறை வேற்ற உதவுவதற்காகவா? என்ற நியாயமான கேள் விக்கு ஈரோஸ் கூறப் போகும் பதில் என்ன? உண்மையில் திருப்திகர மான முறையில் ஆயுத ஒப் படைப்பு செய்திருந்தால் மனித உரிமைகள் ஸ்தாபன உறுப்பினரும் வட-கிழக்கு தமிழ் அகதிகளுக்கு வெளி நாடுகளில் இருந்து சரமாரி யான உதவிகளை பெற்றுக் கொடுத்த திரு. கந்தசாமி ஈரோசின் அடிப்படை சுய நல நோக்கத்தை சரியாகப் புரிந்து கொண்டு பிரிந்து சென்ற திரு. குமாரவேல் (நாநா) ஆகியோரை ஜன நாயக படுகொலை செய்தது யாருடைய ஆயுதங்களால்? அப்பாவி மக்களின் புனர் வாழ்வு பணங்களை மோசடி செய்த அதிகாரிகளைமிரட்டி மோசடிப் பணத்தில் பங்கு பணம் பெற பயன்படுத்து கின்ற ஆயுதங்களின் சொந் தக்காரர்கள் யார்? இவற் றுக்கு ஈரோஸ் கூறும் பதில் என்ன?

3. ஈரோசின் கூற்று,-

இந்தியாவை மையமிட்ட புவிசார் அரசியலை கணிப் பிட்டு இந்தியா தேடும் பாதுகாப்பானது எம் மக் களின் பாதுகாப்புடன் ஏதோ வகையில் சம்பந்தப் பட்டுள்ளது.

உண்மையின் கருத்து

எந்தவகையில் சம்பந்தப் பட்டது.

(தொடரும்)

கேள்வி பதில்

மா . சுப்ரமணியம்
பம்பலபிட்டி

கே: இனவாத அரசியல் இந்நாட்டில் வெற்றி பெற காரணம் என்ன?

ப: இடது சாரிகளின் அர இனவாதம் பேசியதன் விழைவுகளில் தேசியகட்சி களின் இறுமாப்பு பாரபட்சம் இவைபோல் இன்னும் பல காரணம் உண்டு.

மு . சுபையிர்
கிரான்பாஸ்

கே: உண்மையான தேசிய வாதிகளின் கொள் கை எப்படியானதாக இருக் கும்?

ப: இனவாதம் அற்ற வர்களாகவும் தேசிய உற் பத்திக்கு ஆக்கம் கொடுப்ப தின் மூலம் அன்னிய உற் பத்திகளின் மோகங்களில் இருந்து மக்களை விடுவிப்ப வர்களாகவும் இருப்பார் கள்.

அ . செபஸ்தியான்
மட்டுநகர்.

கே: வட-கிழக்கு மாகா ணசபை தேர்தல் ஆட்சே பமனு தள்ளுபடி செய்யப் பட்டு விட்டதால் தேர்தல் ஜனநாயக ரீதியானது என் பது தானே அர்த்தம்?

ப: உமது கருத்து தவரு னது வெகு விரைவில் மாகாணசபை தேர்தல் முடிவு பற்றி ஓர் கட்டுரை வெளியாகும் அதில் உண்மையை நீர் விளங்கி கொள்ளலாம்.

க . மு . றசாக்
அக்கரைப்பற்று

கே: முஸ்லிம்காங்கிரசின் தற்போதைய கொள்கை என்ன?

ப: புயலுக்கு பின் அமைதி குளப்பமே அவர் களின் கொள்கை.

இரா . நவநீதரன்
அராலி

கே: முன்னைய தமிழ் தலைவர்களுக்கும் தற்போ தைய தமிழ் தலைவர்களுக் கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

ப: முன்னைய தலைவர்கள் மாற்றினத் தலைவர்களிடம் தமிழர்களுக்கு அடிவாங்கி கொடுத்தார்கள் பின்னைய வர்கள் தாங்களே அடி போடுகிறார்கள் அவ்வளவு தான்:

சு . கெங்காதரன்
காங்கேசன்துறை

கே: நான் கேட்கப்பட்ட சகல தராதரங்களுடனும் தேர்முக பரீட்சை ஒன்றுக்கு சமூகம் கொடுத்தேன். கூடு தலான எண்ணிக்கையான வர்கள் தெரிவு செய்யப்பட் டும் எனக்கு சந்தர்ப்பம் கிடைக்க வில்லை அது ஏன்?

ப: லஞ்சம் கொடுக்கக் கூடிய தராதரம் உமக்கு இல்லை என்பதை அறிந்து விட்டார்களோஎன்டவோ!

மா. கிருபாகரன்,
வெள்ளவத்தை.

கே: லஞ்சம் என்ருல் என்ன?

ப: பலரிடம் பறித்து சிலரின் பைகளை நிரப்பிக் கொள்வது.

க. இராமசாமி,
டிக்கோயா.

கே. எதிர்வரும் இந்தி யத் தேர்தல் முடிவுகள் எப் படி அமையும்?

ப: எதிர்க் கட்சிகளின் கூட்டணி ஒற்றுமையைப் பொறுத்தது.

செ. பாக்கியராசா,
நல்லூர்.

கே: உண்மை வெளிக நாட்டு செய்திகளை பிரசுரப் பதில் அக்கறை செலுத்தா தது ஏன்?

ப: எம் தாய்நாடு பற்றி எரிகையில் நாம் வெளி நாட்டுசெய்திகளால் அடை யப் போகும் பலன் பெரி தாக ஒன்றும் இருக்கப் போவதில்லை.

கு. மன்மதன்,
கல்முனை.

கே: ஆசிரியரே நீர் வட-கிழக்கு மாகாணத்துக்கு வரமுடியுமா?

ப: ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களே வட-கிழக்கு மாகாணங்களுக்கு வரமுடியாது இருக்கையில் என்னை மட்டும் நீர் போக முடியுமாஎன கேட்பதேன்?

சா. புஸ்பராசா,
மாமாங்கம்.

கே: ஆசிரியரே நீர் தமிழுக்கு தொண்டு செய் தால் என்ன?

ப: தமிழ் இன்னும் பாரிச வாதத்தால் படுக் கையில் கிடக்கவில்லையே தொண்டு செய்வதற்கு:

விடுதலைப் ...

(3ம் பக்கத் தொடர்)

கொலை செய்தும் தமது இயலாமையைத் தீர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறு அப்பாவி பொதுமக்களையும் எமது இயக்க உறுப்பினர் களையும் கொலை செய்வ தால் எமது இயக்கத்துக்கு மக்கள் ஆதாவு குறையும் என மனப்பால் குடிக்கிறார் கள்.

தமக்கு மக்கள் ஆதரவு இல்லாத ஒரே காரணத் துக்காகவே இவர்கள் அப் பாவிப் பொது மக்களையும் எமது இயக்க உறுப்பினர் களையும், அவர்களது சகோ தரிகளையும் சகோதரர்க ளையும், உறவினர்களையும் கொலை செய்கின்றார்கள் என்பது மக்களுக்கு நன்கு புரியும்.

'புலிகளின் தாகம்
தமிழீழ தாயகம்'

அரசியல் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவேங்கை தியாகி திலீபனின் 2வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இக் கவிதைபிரசுரமாகின்றது.(26.9.1989)

திலீபனின்

தியாகம் நிலைக்கும்!

எங்கள் நெஞ்சங்களிலெல்லாம் குடிகொண்ட
தெய்வமே - நீ
நெடுந்தூரம் சென்று இரு வருடம் ஆகின்றதோ!
மஞ்சம் வைத்து மாலை போடும் வேளையிலே
மரண வாசல் உனக்காக திறந்ததோ! திலீபமோ!
திலீபா! திலீபா! என நாம் சடக்குரலிட்டும் அந்த
திலீபம் கூவென்னது சென்று இருவருடம் ஆனதோ
நேற்றுப் போல் இருக்கின்றதே ஐயகோ!
பன்னிரண்டு தினங்கள் நீரின்றி நித்திரையின்றி
ஊண் இன்றி இறுதியில் உணர்ச்சியுமின்றி
உயிர்நீத்த திலீபமே பார்முழுதும்
உன்நாமம் பரந்துகிடக்குதய்யா!
பாரதம் படிக்காத பாடம் எங்கள்
பாவை படிப்பித்ததேம!
பாவிகள் அவர்கள் உன்னை
சாகடித்து விட்டார்களா — இல்லை
உனக்காக சாகசம் ஈழத்தில் அமைத்துவிட்டார்கள்
சத்தியங்கள் அழிவதில்லை சமயத்தில்
செத்ததுபோல் சலனங்கள் காட்டும்
நீச்சயம் புரட்சி வெடிக்கும் நிம்மதி வாழ்க்கைவரும்
ஈழவர் மனங்களில எல்லாம் எதிரொலித்துக்
கொண்டிருக்கும் திலீபமே - நீ!
இன்னொரு பிறவி எடுத்திங்கு வரமாட்டாயோ?
மறவர் படைதான் புலிப்படை!
அதிலும் இவனோர் அடிப்மடையன்றே!
சோழனின் புலிக்கொடிக்கு சிகரம் வைத்தவனே
சுடலிகள் சேர்ந்து புகழ்பாடும் கையெப்பம்
விழுதுவிட்டு வளர்த்த விருட்சமொன்றிலே
பழுதுபட்டரல் பாவம் என்று தங்கத் தமிழ்த் தாயின்
விலங்குடைக்க புறப்பட்ட வேங்கையே - திலீபமே!
கண்ணுடி அணிந்த திலீபம் இன்று எமை
கண்ணீரில் மூழ்க வைத்தலனே
பின்னுலே மரணம் என்பார் திலீபமே
உனக்கு முன்னுலே மரணம் வந்ததேனோ
அரசியற் தலைவராகி அகிலமே போற்றும்போது
அன்னிய எதிரியை அடக்கி சென்றவனே
உள் சொற்பொழிவுகள் அனைத்தும்
எமக்கு சொர்க்கத்தை காட்டட்டும்!
தியாகத் தீயில் தீய்ந்து சருகாகியபோதும்
புதிய தளிர்கட்கு உரமாகிவிட்ட திலீபமே!
சிங்கங்கள் கூண்டுக்குள் சிக்காமல் சென்றவனின்
அங்கம் சோர்ந்ததோ!
அஹிம்சைப் போரினிலே இரண்டாண்டுகள்
என்ன ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
நின்று நிலைக்குமே உன்வீரதியாகம்...ஐயா...திலீபனே

— நுணைவிலூரன்

கட்டாய கல்யாணம் கன்னியர் கலக்கம்

வட-கிழக்கு மாகாணங்களில் அண்மை காலமாக கட்டாய ராணுவ பயிற்சிக்கு தமிழ் இளைஞர்களை பலாத்காரமாக பிடித்து வந்த காரணத்தால் அப்பகுதி இளைஞர்கள் இந்த கொடூரத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள தென்னிலங்கைக்கு படை பெடுத்தனர். இதேபோன்று தற்சமயம் கன்னிப்பெண்களும் வட-கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியேற வேண்டிய துர்ப்பாக்கியமான ஓர் நிலையை இந்திய ஆதரவு இயக்கங்கள் தோற்றுவித்துள்ளன.

மாகாணசபை ஆளுங்கட்சி கூட்டணி இயக்கமான ஈ.என்.டி.எல்.எப் இயக்க குண்டர்கள் தாம் விரும்பிய பெண்ணை தமக்கு திருமணம் செய்துவைக்கவேண்டும் என பெண்ணைப்பெற்ற பெற்றோர்களை பலவகையிலும் அச்சுறுத்தி தமது காரியத்தை சாதித்துக் கொள்கின்றனராம். அந்நிய படையின் ஆதரவுடன் ஆயுதபாணிகளாக நடமாடி திரியும் இவர்களை பகைத்து கொள்ளமுடியாது வேறு வழியின்றி சில அப்பாவி பெற்றோர்கள் இவர்களின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து விடுகிறார்கள். இவர்களின் கட்டளையை ஏற்றுக்கொள்ளத்தவறின் கன்னிப் பெண்களை பலாத்காரமாக கடத்திச்சென்று கட்டாய திருமணம் செய்து கொள்கின்றனராம். திருமணம் செய்ய விரும்பும் இயக்க குண்டர்களுக்கு அவர்களது இயக்கம் தாலி அன்பளிப்பு செய்வதுடன் ஏனைய வசதிகளையும் செய்து கொடுத்து ஒத்தாசை வழங்குகின்றனராம்.

இவ்விதமாக அண்மையில் திருகோணமலை, பெரியகல்லாறு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் கன்னிப் பெண்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக திருமணம் செய்துள்ளனர். இவைபற்றி தெரியவருவதாவது, திருகோணமலை பள்ளத்தோட்டம் என்னும் பகுதியில் உள்ள வீடொன்றில் தாகத்துக்கு குடிக்க தண்ணீர் கேட்டு சென்ற ஈ.என்.டி.எல் எப் உறுப்பினர் ஒருவர் அவ்வீட்டில் இருந்த அழகிய கன்னியை கண்டதும் அவள் மீது மையல் கொண்டு அக்கன்னியை தனக்கு திருமணம் செய்து தரும்படி பெண்ணின் பெற்றோரிடம் கேட்டுள்ளார். அக்கன்னிப் பெண் ஏற்கனவே ஒருவாலிபரை காதலித்திருந்திருக்கிறார். அவனின் காதலன் வெளிநாடு சென்று உழைத்து பணத்துடன் நாடு திரும்பி மூன்று நாட்கள் முடிவடையு முன்னரே காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் கொண்டு போன கதையாக அவ்விளைஞனின் காதலியை இன்னுமொருவன் தட்டி பறிக்க முனைந்ததை கண்டு பெண்ணின் பெற்றோர்கள் விபரத்தை கூறியுள்ளனர். ஆனால் எதற்கும் மசியாத ஈ.என்.டி.எல்.எப் குண்டர்கள் அப்பெண்ணை தமது சகபாடிக்கே கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியதுடன் அக்கன்னிப் பெண்ணின் காதலனை கொலை செய்யப்போவதாக மிரட்டியுள்ளனர். அடைந்தால் மாகாதேவி இன்றேல் மாகாதேவியின் காதலனுக்கு மரணதண்டனை என திட்டவட்டமாக கூறி விட்டனராம். வேறுவழியின்றி ஈ.என்.டி.எல்.எப். குண்டனுக்கே அப்பகன் இளி திருமணம் செய்து வைக்கப்பட்டதாம்.

இதேபோன்று பெரிய கல்லாற்றை சேர்ந்த ஒரு கன்னிப் பெண்ணை அவரின் பெற்றோரினது விருப்பத்துக்கு மாறுக ஈ.என்.டி.எல்.எப். குண்டன் ஒருவன் கடத்தி சென்று திருமணம் செய்து தற்சமயம் கல்முனையில் குடும்பம் நடாத்துகிறார்களாம்.

இவ்விதமாக பல கன்னி பெண்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் முன்னறிவித்தல்கள் கொடுக்கப் பட்டுள்ளதால் பதற்ற மடைந்த பெற்றோர் இப் பலாத்காரமான கற்பழிப்புகளில் இருந்து காப்பாற்றி கொள்ள தமது பெண் பிள்ளைகளை வட-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே எங்காவது தங்க வைக்க கூடிய பாதுகாப்பான இடங்களை தேடி அலைய ஆரம்பித்து விட்டார்கள் என அறியக்கூடியதாக உள்ளது. இதுவரை இளைஞர்கள்தான் தென்னிலங்கைக்கு படையெடுத்தார்கள் என்றால் இனி கன்னி பெண்களும்தென்னிலங்கை நோக்கி படையெடுக்க வேண்டிய கேவலம் ஏற்பட்டுவிட்டது என பலரும் கூறி வேதனைப்படுகிறார்கள். (ந. நி.)

பெண்புலிகள் ...

(1ம் பக்கத் தொடர்)

யைாம் சார்ந்தவர்களுமாக ஓர் அணி திரண்டு கொக்குளாய் காட்டுப் பகுதியைச் சுற்றிவளைக்க முயற்சிக்கையில் புலிகளின் அகோரத் தாக்குதலில் அந்நியப்படையினரில் ஏழு பேர் மாண்டனர். பெண் புலிகளின் தாக்குதல்களின் மறைவிடங்களை சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியாத அன்னிய படையும் அவர்களின் அடிவருடிகளும் செய்வதறியாது திணறி மாண்டுபோன தமதுசகாக்களின் உடல்களையும் தூக்கி கொண்டு திரும்பினராம்.

(ந. நி)

காமுகனின் காடைத்தனம்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

துக்குப் பயந்து இவருக்கு கட்டாயமாக புகலிடம் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றதாம். இல்விதமாக இவருக்கு புகலிடம் கொடுக்க முன்வரும் பெண்கள் இரவில் இவருக்கு துணையாக கூடவே உறங்க வேண்டும் என நிபந்தனை விதிக்கிறாராம். இதற்கு இசைய மறுக்கும் பெண்களை கொலை செய்வதாக மிரட்டி காரியத்தை சாதிக்க முனைகிறாராம்.

இதுபற்றி பல பெண்களிடம் கருத்தறிய முயன்றபோது அவர்கள் சுருக்கமாக பின்வருமாறு கூறினர் நாடு பிடியன்களால் அப்பாவி பெண்களும் வாழ முடியவில்லை என கண்ணீர் உகுத்தனர்.

(ந. நி)

கிளிநொச்சியில் பரிதாபம் தாய்

மனதை உருக்கும் இச் சம்பவம் சில நாட்களுக்கு முன் கிளிநொச்சியைச்சேர்ந்த ஓர் கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஈ என் டி எல் எப் கிராமத்தில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது: மேற்படி கிராமத்தில் ஈ என் டி எல் எப் இயக்கத்தினரின் ஆள்பிடி நடவடிக்கையில் அகப்பட்ட அப்பாவி இளைஞன் ஒருவரின் தாயார் ஈ என் டி எல் எப் முகாமிற்கு கிருமி நாசினிபோத்தல் ஒன்றுடன் சென்று தனது மகனை திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது தான் விஷம் அருந்தி முகாமிலேயே தனது உயிரை மாய்க்கப் போவதாக அடம் பிடித்துள்ளார்.

நீ உயிரை மாய்த்தாலும் எம்க்கு பிரச்கினையில்லை. உனது மகனை நாம் விடப் போவதில்லை என இயக்கத்தினர் கூறினராம். இதைக் கேட்ட அந்த அப்பாவித் தாய் கிருமிநாசினி போத்தலைத் திறந்து வாயருகே கொண்டு செல்கையில் அங்கிருந்த இயக்க இளைஞர்களில் ஒருவன் மிகுதி லைக்காது முழுவதையும் குடி எனக்கூறி தையாண்டியாக வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினனும். இவ்வார்த்தைகளால் ஆத்திரம் மேலிட்ட அப்பாவித் தாய்கிருமி நாசினி முழுவதையும்குடித்து தனது இன்னுயிரைஇயக்க முகாம் முன்றலிலேயே போக்கிக்கொண்டுள்ளார்.

இந்திய ராணுவம் தமிழ் மக்களுக்கு வழங்கி வரும் பாதுகாப்பு யோக்கியாம் சத்தில் இதுபோன்று நூற்றுக்கணக்கான சம்பவங்கள் தொர்ச்சியாக தொர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ந நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபங்களை தீபந்தமாக்காதீர்!

தமிழ் தினசரி பத்திரிகை ஒன்றில் முஸ்லிம் கட்சித்தலைவர் ஆற்றிய உரை என குறிப்பிட்டு அவ் உரையை பிரசுரித்திருந்தது. முஸ்லிம் கட்சி தலைவர் ஆற்றிய உரையில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தது: விவஸ்தை கெட்டதனமாக சந்தர்ப்பவாத கருத்துக்கள் கூறுவதற்கு தம்மைவிட்டால் வேறு ஆள் கிடையாது என்பதை தொடர்ந்து நிருபித்துக்கொண்டே வருகிறார்கள்.

1. முஸ்லிம்களையும் அரசு-புலிகள் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும்.

2. வட-கிழக்கு மாகாணங்களின் அமைதிக்கு முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும்.

3. வட-கிழக்கு மாகாண சபை தேர்தலின் போது ஆயுதங்கள் களையப்படவில்லை. இதன் காரணமாகவே முஸ்லிம்கள் துயர் அடைகின்றனர்.

4. அமைதிப்படைவெளியேறுவதை முஸ்லிம் கட்சி ஆதரிக்கும்.

5. முஸ்லிம்களை ஆயுதம் ஏந்த வைக்காதீர்.

6. முஸ்லிம்கள் ஒன்று படப் போகின்றார்கள்.

இவ் உரை முஸ்லிம் கட்சியின் நிலையற்ற அரசியல் கொள்கையையும், தெளிவற்ற அரசியல் நிலைப்பாட்டையும் சரியாகப் புரிந்து கொண்ட முஸ்லிம்கள் தமது அரசியல் நிலைப்பாட்டினுல் முஸ்லிம் கட்சியின் தலைமைத்துவத்தை முற்றுகை நிராகரித்து ஒதுக்கி விட்டனர் என்பதை உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடே எனக்கூறின் அது மிகையாகாது. முஸ்லிம் கட்சித் தலைவரின் இவ் உரையை சற்று பதார்த்த பூர்வமாக ஆராய்ந்து பார்ப்பின்பல குத்துக் கரணங்கள் வெளிப்படையாலனைத் தடுக்க முடியாது.

அரசு-புலிகள் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக முஸ்லிம் கட்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென மறைமுகமாக குறிப்பிட்டுள்ளது. இக்கோரிக்கை நியாயமானதாகப்படவில்லை. ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் அப்பாவி முஸ்லிம் மக்கள் அன்னிய ராணுவத்தின் அனுசரணையுடன் தொடர்ச்சியான தாக்குதலுக்குட்படுத்தப் பட்டு வருகின்ற போதும் தனது அன்னிய ராணுவத்தின்முஸ்லிம்களுக் கெதிரான திட்டமிட்ட தாக்குதல்களை நியாயப்படுத்தியே வருகின்றனர். ஏதோ சம்பிரதாயத்திற்காக அன்னிய ராணுவம் வெளியேற வேண்டும் என்ற கருத்தை கூறுகின்றார், ஆயினும் வட-கிழக்கு மாகாணசபை இந்திய ராணுவத்தின் வெளியேற்றத்துக்குஎதிராக பிரேரணை ஒன்றை வாக்கெடுப்புக்கு விடுகையில் முஸ்லிம் கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் அதை ஆதரித்து வாக்களித்துள்ளனர். முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் தாக்கப்படும்போதெல்லாம் தமது பாதுகாப்பை இலங்கை ராணுவத்திடம் ஒப்படைக்கும்படி மன்றாடிய போதெல்லாம் முஸ்லிம்மக்களை பாதுகாக்கும் பொறுப்பை இந்திய ராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும் என முஸ்லிம்களின் கோரிக்கைக்கு மாறுகவே அறிக்கைகள் விட்டு வந்தனர். விடுதலைப் புலிகளை முறியடிப்பதையே இலக்காகக் கொண்டுள்ள அன்னிய ஆக்கிரமிப்பு சக்திக்கு துணையாக முஸ்லிம் கட்சி செயற்பட்டுவருகிறது என்பதை நிரூபிக்கக் கூடியதாக 1988 நவம்பர் 17ம் திகதிய 'சண்டே டைம்ஸ்' என்னும் பத்திரிகைக்கு முஸ்லிம் கட்சித் தலைவர் அளித்துள்ள பேட்டி கவனிக்கத்தக்கது. மாகாணசபை தேர்தலில் கலந்து கொள்ளாவிட்டால் 'இனிமேல் எல்லாரிடமும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கக்கூடியவர்கள் அல்ல' என்ற நிலையை இந்தியா எடுத்திருக்க முடியாது. தமிழர்கள் வாக்களிக்கப் போனது முஸ்லிம்கள் வாக்களிக்கப் போனதற்காகத்தான்) முஸ்லிம் கட்சி ஒரு தூண்டு சக்தியாகப் பயனளித்தது.

பிரபாகரனின் முதுகெலும்பு முறியடிக்கப்பட்டுவிட்டது என்று யாராவது கூறினால் அந்தப் பெருமை முஸ்லிம் கட்சிக்கே வரவேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்தியா எதை எதிர்பார்க்கிறதோ அதைச் செய்துமுடிப்பதில் பெருமை கொள்ளும் மு. க., இந்தியா விரும்பாத அரசு-புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள விரும்புவதில் அர்த்தமில்லை அதே வேளை இப்பேச்சுவார்த்தையை முறியடிக்க முயலும் இந்தியாவின் ஆதரவை முழுமையாக நம்பியிருக்கும் இந்தியாவின் ஒற்றர் போல் பேச்சுவார்த்தைகளில் சேர்ந்துக்கொள்வதாகவே அமையும். எது எவ்வாறு யினும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகளை பிரதிபலிக்கக் கூடிய வகையில் அரச இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளை பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தையில் சேர்த்துக் கொண்டுள்ளது. முஸ்லிம்களின் விருப்புக்கு மாறான கொள்கையுடைய முஸ்லிம் கட்சி சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமில்லை.

1. வட-கிழக்கு மாகாண அமைதிக்கு முஸ்லிம்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என விதண்டா வாதமான கருத்தை வெளியிட்டுள்ளார் என்று அன்னியப் படை எமது மண்ணில் காலடி வைத்ததோ அன்றிலிருந்து தான் முஸ்லிம் மக்களின் அமைதியான வாழ்வுக்குஆபத்து ஏற்பட ஆரம்பித்து இன்று உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது என்பதை வட-கிழக்கு மாகாணங்களில் வாழும் சிறு பிள்ளையும் கூறும்உண்மை.

வட-கிழக்கு மாகாணங்களில் இருந்து இந்தியப் படை வெளியேறும் வரை அங்கு அமைதி வரப்போவதுமில்லை முஸ்லிம்களின் பாதுகாப்பு என்ற பேச்சுக்கும் இடமுமில்லை, முஸ்லிம்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவும் முடியாது. மு. க. தலைவருக்கு உண்மையாக முஸ்லிம் மக்களின் நலனில் அக்கறை உள்ளவர் எனின் 6000 × 17 ருபாய்களையும் 17 பஜேரோக்களையும் தியாகம் செய்து வட-கிழக்கு மாகாணசபையில் இருந்து தமது 17 அங்கத்தவர்களையும் ராஜிநாமாச் செய்விக்க வேண்டும்.

3. வட-கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஆயுதங்கள் களையப்படவில்லை. இதனால்தான் முஸ்லிம்கள் சொல்லொண்ணாத்துயர் அடைகிறார்களாம். இக் கூற்று மு.க. தலைவரின் வெளிப்படையான குத்துக்

(6ம் பக்கம் பார்க்க)

யார் இவர்?

கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

விநோயகப் பெருமானைக் குறிக்கும் பெயரைக் கொண்டவராம் தாலிக்கொடி அறுக்கப் போன இடத்தில் நான்கு பிள்ளைகளின் தாயான கர்ப்பிணிப் பெண்ணை படுகொலை செய்தவராம்! இச்சம்பவத்தின் போது எதிர்பாராத விதமாக இங்கள பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவரிடம் கையும்மெய்யுமாக மாட்டிக்கொண்டவராம்! மட்டுநகர் சிறையுடைப்பின் போது தப்பிச்சென்று நிருமணம்செய்து கொண்டவராம்! குடும்ப பொருளாதார நெருக்கடியை சமாளிக்க வேண்டி இயக்கம் ஒன்றில் சேர்ந்து கொண்டாராம். இயக்க மோதல்களின் போது பெரியவர்களிடம் சரணடைந்து தப்பித்துக்கொண்டவராம். மாகாணசபைத் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர் இரும்புப் பெட்டியை அயல் விட்டுக் கோடாலியால் உடைத்து கொள்ளையடித்தவர்களின் தலைவருமாம்! தற்சமயம் இவர் மாகாணசபை ஆளும் கட்சியில் ஒரு பெரிய உயர் அதிகாரியாம்! அதிகாரம் பரவலாக்கலின் அறிபுத சக்தியால் 100000 ரூபாவைச் சம்பாதித்தும் கொண்டவராம் இவரைப் போன்று பயங்கர கிரிமினல்களை நியமிக்கக்கூடிய இயக்கம் யாராக இருக்கலாம்.

உங்கள் வீட்டின் மங்கள காரியங்களுக்கு ஏற்ற வகையில் விதம் விதமான பூமணவறை பூமாலை வகைகள், வீட்டு அலங்காரம், கார் அலங்காரம் போன்றவைகள் பலவர்ண மலர்களால் பலவகை டிசைன்களில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்டபடி பெற்றுக்கொள்ள கூடிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

லக்ஷ்மி பிளவர்ஸ்

இல. 224, காலி வீதி,

வெள்ளவத்தை, கொழும்பு - 6.

சுவைமிக்க வறுத்த பொரித்த கடலை வகைகள்

இங்கு உங்களுக்குத் தேவையான பத்திரிகைகள், கதை புத்தகங்களுடன்

உங்கள் அபிமான பத்திரிகை "உண்மை" யும் பெற்றுக்கொள்ளலாம்

இப்பத்திரிகை கொழும்பு 14, 65, பெரிஸன் வீதி உண்மை வெளியீட்டகத்திலுள் கொழும்பு சரவோதய அச்சகத்தில் அச்சேற்று வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org